# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.08.2022 முதல் 21.08.2022)

அறிக்கை எண்: 65/2022 தேதி: 16.08.2022

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37 °செ முதல் 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.08.2022 முதல் 21.08.2022)

| கடந்த வார வானிலை (12.08.2022 முதல் 15.08.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (17.08.2022 முதல் 21.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/08 | நாள்-2 13/08 | நாள்-3 14/08 | நாள்-4 15/08 | தேதி | நாள்-1 17/08 | நாள்-2 18/08 | நாள்-3 19/08 | நாள்-4 20/08 | நாள்-5 21/08 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 4 | 3 | 15 | 0 | 0 |
| 38 | 37 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 34 | 34 |
| 27 | 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 25 | 26 | 27 |
| 4 | 4 | 6 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 6 | 4 | 4 |
| 65-57 | 69-56 | 63-68 | 66-69 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 75-65 | 70-60 | 70-60 |
| 9 | 6 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| தெற்கு | தென் கிழக்கு | தெற்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 17.08.2022 முதல் 19.08.2022 வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| | | |
|---|---|---|
| நெல் | | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | அறுவடை | எதிர் வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை எதிர்பார்க்கப்படுவதால் மழைக்கு முன்பாக அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்யவும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| நெல் | நடவு வயல் | வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் நடவு வயலை தயார் செய்யவும் |
| கால்நடைகளுக்கு | ஆடு, மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

அறுவடை நிலையில் உள்ள நெல்லினை மழைக்கு முன்பாக அறுவடை செய்யவும்.

**இயக்குநர்**